**சுகாதார அமைச்சின்**
**குடும்புநல உத்தியோகத்தர் பதவிக்காக பயிற்சிக்கு பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கு இணையத்தளத்தின் வழியாக சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் வழியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.

விண்ணப்பங்களை சுகாதார அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

**2015, 2016 அல்லது 2017 ஆகிய ஏதாவது ஒரு ஆண்டில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் எந்தவொரு பாடத்துறையிலும் தோற்றி சித்தியடைந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவார்கள்.**

விண்ணப்ப முடிவுத் திகதி 2021.02.01 ஆகும்.

ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

**விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறைகளை ஆரம்பிக்க முன்னர் விண்ணப்பதாரியிடம் இருக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமும் பின்வரும் ஆவணங்கள் மற்றும் விபரங்கள் இருத்தல் வேண்டும்.

- தேசிய அடையாள அட்டை
- உயரம் (செ.மீட்டரில்) குறிப்பிடப்படல் வேண்டும்
- தொடர்பு கொள்ள வேண்டிய கையடக்க தொலைபேசி இலக்கம்
- வர்த்தமானி அறிவித்தலின் 6.2 உட்பிரிவின் படி ரூபா 500/= பணத்தை செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு

கையடக்க தொலைபேசி இலக்கமொன்றை உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது அல்லது தாய் அல்லது தகப்பம் அல்லது நெருங்கிய ஒருவரின் தொலைபேசி இலக்கத்தையும் உள்ளிடலாம்.

இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் அல்லது பண வைப்பு இயந்திரம் ஊடாக அல்லது இணையத்தள வங்கி சேவைகளின் ஊடாக 500/= ரூபா பணத்தை இலங்கை வங்கியின் தெப்ர பிறேன் கிளையின் இலக்கம் **7041318** எனும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பரீட்சைக்கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு செலுத்தி பெற்றுகொண்ட பற்றுச்சீட்டில் உள்ள அச்சு இலக்கங்களை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் உள்ளிடவும். பணம் செலுத்திய பின்னர் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பதாரி தன்வசம் பாதுகாப்பாக வைத்திருக்கவும். (ATM இயந்திரத்தின் ஊடாக பணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்த பற்றுச்சீட்டில் அடங்கிய தரவுகள் பின்னர் அழியக்கூடும் என்பதால் மூலப்பிரதிக்கு மேலதிகமாக நிழற்பிரதியொன்றையும் வைத்திருக்கவும்.)

**விண்ணப்பம் சமர்ப்பிக்கும் செயற்பாட்டின் படிமுறைகள்**

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்தல் ⟶ விண்ணப்பபம் பதிவேற்றம் (UPLOAD) செய்த பின்னர் கிடைக்கும் 5 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டை, விண்ணப்பத்தின் பிரதிகளை பின்னர் பெற்றுக்கொள்வதற்கு வசதிக்காக பாதுகாப்பாக வைக்கவும்.

- இணைய இணைப்பில் ஏற்படும் தடைகள் காரணமாக அல்லது வேறு காரணங்களால் விண்ணப்பத்தை நிரப்பும் செயற்பாட்டை நிறைவு செய்ய முடியாது போகுமிடத்து, அதனை மீண்டும் புதிய விண்ணப்பமாக மீண்டும் நிரப்ப வேண்டும்.

- பூர்த்தி செய்த விண்ணப்பத்தை இணைய வழி ஊடாக சமர்ப்பித்த பின்னர் அதன் அச்சுப் பிரதியொன்றை பெற்று தம்வசம் வைத்திருக்கவும். **அதனை தபாலில் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.**

**இணைய வழி ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை:**

1. விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. க.பொ.த (உ.தர) பரீட்சையில் பயன்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.

3. உரிய பரீட்சை இலக்கத்தை உள்ளிட்டதும் க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் மற்றும் க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறுகள் தானாகவே உருவாகும். எனினும் அந்த பெறுபேறுகளில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், உங்களிடம் உள்ள பெறுபேற்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளை அதற்கு கீழே உள்ள பிரிவில் குறிப்பிடவும்.

**விஷேட அவதானத்திற்கு**

- வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து தெளிவு பெற்ற பின்னர், இதற்காக தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் மின்னஞ்சல் வழியாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது தொழில்நுட்ப ரீதியில் ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் மட்டும் அந்த தொழில்நுட்ப சிக்கல்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் (அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த) **0112 340 007** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களை பெற முடியும்.

- பிற விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.